# April , 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. முழுவதும் உள்நாட்டில் கட்டமைக்கப்பட்ட அணு சக்தியில் இயங்கக் கூடிய ஏவுகணை தாங்கி நீர்மூழ்கிக் கப்பலான 'ஐஎன்எஸ் அரிதமான்' இந்திய கடற்படையில் சேர்க்கப்பட்டது. இது இந்திய கடற்படையின் பலத்தை மேலும் அதிகரித்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

(i) அமெரிக்கா, ரஷியா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா உள்ளிட்ட நாடுகளுக்கு அடுத்தபடியாக அணு சக்தியில் இயங்கும் நீர்மூழ்கி கப்பலைக் கொண்ட நாடாக இந்தியா திகழ்ந்து வருகிறது.

(ii) 'ஐஎன்எஸ் அரிஹந்த்' என்ற முழுவதும் உள்நாட்டில் கட்டமைக்கப்பட்ட முதல் அணுசக்தி நீர்மூழ்கி கப்பல் கடந்த 2016-ஆம் ஆண்டு இந்திய கடற்படையில் பணியில் இணைக்கப்பட்டது. அதற்கு அடுத்ததாக, 'ஐஎன்எஸ் அரிகாட்' என்ற முழுவதும் உள்நாட்டில் கட்டமைக்கப்பட்ட இரண்டாவது அணுசக்தி நீர்மூழ்கி கப்பல் கடந்த 2024-இல் இந்திய கடற்படையில் சேர்க்கப்பட்டது. தற்போது, 'ஐஎன்எஸ் அரிதமான்' என்ற மூன்றாவது அணு சக்தி நீர்மூழ்கி கப்பல் பணியில் சேர்க்கப் பட்டுள்ளது. கடல் பரப்பில் பல மாதங்கள் மேற்கொள்ளப்பட்ட செயல்திறன் சோதனைகளுக்குப் பிறகு, விசாகப்பட்டினத்தில் உள்ள கடற்படை தளத்தில் நடந்த நிகழ்வில் இந்த நீர்மூழ்கிக் கப்பல் கடற்படையில் சேர்க்கப்பட்டது.

(iii) இந்தியாவின் அணுசக்தி ஏவுகணை தாங்கி நீர்மூழ்கிக் கப்பல் (எஸ்எஸ்பிஎன்) திட்டத்தின் கீழ், முழுவதும் உள்நாட்டில் இந்த நீர்மூழ்கிக் கப்பல்கள் கட்டமைக்கப்பட்டு படையில் சேர்க்கப்பட்டு வருகின்றன. இவை அணுசக்தியில் இயங்கக்கூடியதாகவும், அணு ஏவுகணைகள் உள்ளிட்ட நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணைகளைத் தாங்கிச் செல்லும் திறன் கொண்டவையாகவும் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

2. வரும் 2026-27 கல்வியாண்டு முதல் பள்ளிகளில் 6-ஆம் வகுப்பிலிருந்து மும்மொழி பாடத் திட்டத்தை அறிமுகப்படுத்த மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (சிபிஎஸ்இ) திட்டமிட்டுள்ளது.

(i) மேலும், 9-ஆம் வகுப்பு கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களில் இரண்டு நிலைகளிலான பாடத் திட்டங்களை அறிமுகப்படுத்தவும் திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து சிபிஎஸ்இ மூத்த அதிகாரிகள் வெள்ளிக்கிழமை கூறியதாவது:

- புதிய தேசிய கல்வித் திட்ட நடைமுறையில் (என்சிஎ்ப்) பரிந்துரைக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், பன்மொழி பாடத்திட்டத்தை பகுதி பகுதியாக சிபிஎஸ்இ நடைமுறைப்படுத்தி வரும் நிலையில், 6-ஆம் வகுப்புமுதல் மூன்றாவது மொழிப் பாடத்தையும் கட்டாயம் கற்பது வரும் 2026-27 கல்வியாண்டிலிருந்து அமல்படுத்தப்பட உள்ளது. இந்த மூன்றில், இரண்டு இந்திய மொழிகளை மாணவர்கள் கட்டாயம் தேர்வு செய்து படித்தாக வேண்டும்.
- அதே நேரம், வெளிநாட்டு பள்ளிகளிலிருந்து திரும்பும் மாணவர்களுக்கு, அவர்கள் 8 அல்லது 9-ஆம் வகுப்பில் படித்த மூன்றாம் மொழி உள்நாட்டு பள்ளிகளில் கற்பிக்கப்படாத சூழலில், அனுமதிக்கப்பட்ட விதிமுறைகளின்படி அத்தகைய மாணவர்களுக்கு விலக்கு அளிக்கப்படலாம்.

(ii) கணிதம், அறிவியலில் இரு நிலை பாடம்:

- அதுபோல, வரும் கல்வியாண்டு முதல் 9-ஆம் வகுப்புக்கான கணிதம் மற்றும் அறிவியல் பாடங்கள் இரண்டு நிலைகளில் அறிமுகப்படுத்தப்பட உள்ளன. அதாவது, கட்டாய அடிப்படைப் பாடம் மற்றும் மேம்பட்ட பாடத்திட்டம் என இரண்டு நிலைகளில் அறிமுகப்படுத்தப்படும்.
- இதில், அடிப்படை கணித, அறிவியல் பாடங்களை அனைத்து மாணவர்களும் கட்டாயம் படித்து தேர்ச்சி பெற்றாக வேண்டும். இந்தப் பாடங்களுக்கு பொதுவான 80 மதிப்பெண்களுக்கு 3 மணி நேரத் தேர்வாக நடத்தப்படும்.
- மேம்பட்ட கணித, அறிவியல் பாடங்கள் என்பது மாணவர்களின் விருப்பத் தேர்வு பாடங்களாகும். அதாவது, தங்களின் உயர் திறனை மேம்படுத்திக் கொள்ள விரும்பும் மாணவர்கள் இந்த மேம்பட்ட கணித, அறிவியல் பாடங்களை கூடுதலாகத் தேர்வு செய்து படிக்கலாம். இதற்கென தனியாக 25 மதிப்பெண்களுக்கு தேர்வு நடத்தப்படும். இந்த மதிப்பெண், மாணவர்கள் பெறும் மொத்த மதிப்பெண் பட்டியலில் குறிப்பிடப்படாது என்றபோதும், மேம்பட்ட பாடங்களில் 50 சதவீதத்துக்கு மேல் மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு மட்டும் மதிப்பெண் சான்றிதழில் தனி தரக் குறியீடு குறிப்பிடப்படும் என்று தெரிவித்தனர்.
- 10-ஆம் வகுப்பில் 2027-28 கல்வியாண்டில் இந்த இருநிலை கணித, அறிவியல் பாடத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

3. மியான்மரில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை கவிழ்த்துவிட்டு அதிகாரத்தைக் கைப்பற்றிய ராணுவ ஆட்சியாளர் மின் ஆங் லயிங், நாடாளுமன்ற வாக்கெடுப்பு மூலம் அந்நாட்டின் புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

(i) இதன்மூலம், கடந்த 5 ஆண்டுகளாக நாட்டை தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ள அவரது அதிகாரம் ஜனநாயக முறைப்படி நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

(ii) மியான்மரில் கடந்த டிசம்பர், ஜனவரி மாதங்களில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ராணுவ ஆதரவு பெற்ற யுஎஸ்டிபி கட்சி மாபெரும் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. எனினும், இது ராணுவ ஆட்சிக்கு ஒரு ஜனநாயக முகமூடி அணிவிப்பதற்கான 'ஏமாற்று வேலை என ஐ.நா.மற்றும் மேற்கத்திய நாடுகள் விமர்சித்தன.

(iii) இந்நிலையில், புதிய அதிபரைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு, மியான்மர் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. இதில் ஆளும் ராணுவ ஆதரவு பெற்ற யுஎஸ்டிபி கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும், ராணுவத்தின் சார்பில் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களும் மின் ஆங் லயிங்குக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

(iv) அவரை எதிர்த்துப் போட்டியிட்ட முன்னாள் ராணுவ ஜெனரலும், பிரதமருமான நயோ சாவ் 126 வாக்குகள் மட்டுமே பெற்ற நிலையில், மின் ஆங் லயிங் 429 வாக்குகள் பெற்று வெற்றிப்பெற்றார்.

(v) கடந்த 2011 முதல் மியான்மர் ஆயுதப் படைகளை வழிநடத்தி வந்த 69 வயதான மின் ஆங் லயிங், அதிபர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டதையடுத்து, தனது ராணுவத் தளபதி பதவியை தனக்கு நெருக்கமான விசுவாசியான யே வின் ஓ-விடம் அண்மையில் ஒப்படைத்தார்.

(v) சர்வதேச கண்டனமும்; ஆதரவும்:

- மின் ஆங் லயிங் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு மியான்மரின் நீண்டகால நட்பு நாடான சீனா வாழ்த்து தெரிவித்துள்ளதுடன், அமைதியை நிலைநாட்ட புதிய அரசுக்கு ஆதரவளிப்பதாகவும் உறுதியளித்துள்ளது.
- அதேநேரம், 'மின் ஆங் லயிங் ராணுவ உடையில் இருந்து சாதாரண உடைக்கு

மாறலாம்; ஆனால் சர்வதேச போர் குற்றச்சாட்டுகளில் இருந்து அவர் தப்ப முடியாது' என சர்வதேச பொதுமன்னிப்பு சபை கடுமையாகக் கண்டனம் தெரிவித்துள்ளது.

- ரோஹிங்கயா முஸ்லிம்கள் மீதான தாக்குதல் தொடர்பாக மின் ஆங் லயிங்கிற்கு எதிராக சர்வ தேச குற்றவியல் நீதிமன்றம் கடந்த 2024-இல் பிடியாணை கோரியிருந்தது நினைவுகூரத்தக்கது.

(vi) பின்னணி:

- அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற ஆங் சான் சூகி தலைமையிலான அரசை கடந்த 2021-இல் கவிழ்த்து அவரை சிறை பிடித்தது முதல், மியான்மரில் ராணுவத்துக்கு எதிராக உள்நாட்டுப் போர் தீவிரமடைந்துள்ளது.
- இந்நிலையில், ராணுவத்தின் சர்வாதிகாரத்தை முழுமையாக வீழ்த்துவதற்காகவும், புதிய அரசியல் களத்தை உருவாக்குவதற்காகவும் ஜனநாயக ஆதரவுக் குழுக்களும், சிறுபான்மை ஆயுதக் குழுக்களும் ஒன்றிணைந்து 'கூட்டாட்சி ஜனநாயக ஒன்றியத்துக்கான வழிகாட்டுதல் கவுன்சில்' என்ற புதிய முன்னணியை இந்த வாரம் அமைத்துள்ளன.
- இச்சூழலில், புதிய அதிபரின் பதவியேற்பு மியான்மர் அரசியலில் மேலும் கொந்தளிப்பை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

4. இந்திய வம்சாவளி சிறுமி போதனா சீனிவாசன் (11) இங்கிலாந்தின் நம்பர் 1 செஸ் வீராங்கனை ஆனார்.

5. பில்லி ஜீன் கிங் கோப்பை டென்னிஸுடன் தொடர்புடையது.

6. நவீன தொழில்நுட்பங்களுடன் முழுவதும் உள்நாட்டில் கட்ட மைக்கப்பட்ட 6,670 டன் எடை கொண்ட போர்க் கப்பலான 'ஐஎன்எஸ் தாராகிரி ஆந்திர மாநி லம் விசாகப்பட்டினம் கடற்படை தளத்தில் வெள்ளிக்கிழமை நடை பெற்ற நிகழ்வில் இந்திய கடற்ப டையில் இணைக்கப்பட்டது.

- எதிரி நாடுகளின் போர்க் கப்பல்கள்களைத் துல்லியமாக கண்காணித்து நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலும், தேவைப்பட்டால் பதிலடி கொடுக்கும் வகையிலும் நவீன ரேடார், சோனார் மற்றும் பிரமோஸ் உள்ளிட்ட ஏவுகணைகளைத் தாங்கிச் செல்லும் வசதிகளுடன் 'ஐஎன்எஸ் தாராகிரி' வடிவமைக்கப்பட்டுள்ளது என்றார்.

7. குஜராத் சட்டப்பேரவையில் பொது சிவில் சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டிருப்பதற்கு அகில இந்திய முஸ்லிம் தனிநபர் சட்டவாரியம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

(i) குஜராத் சட்டப்பேரவையில் பொது சிவில் சட்ட மசோதா கடந்த வாரம் நிறைவேற்றப்பட்டது. அந்த மசோதாவில், அனைத்து மதத்தினருக்கும் திருமணம், விவாகரத்து, திருமணம் செய்யாமல் சேர்ந்து வாழ்தல் தொடர்பான விதிகள் ஒரே மாதிரிதான் என்றும், இதை மீறினால் 7 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பலதார மணம் சட்டவிரோதம் என்றும், திருமணத்தையும், திருமணம் செய்யாமல் சேர்ந்து வாழ்வதையும் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ii) இந்த மசோதாவுக்கு அகில இந்திய முஸ்லிம் தனிநபர் சட்ட வாரியம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இதுகுறித்து புது தில்லியில் அந்த அமைப்பின் மூத்த நிர்வாகிகள் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

- பொது சிவில் சட்ட மசோதா தற்போது குஜராத் ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. அந்த மசோதா, அரசியலமைப்பு ரீதியில் குறைபாடுடையது. சட்டரீதியிலும் ஏற்க முடியாதது. அந்த மசோதா, மத சுதந்திரம் மற்றும் பொதுமக்கள் சுதந்திரத்ததுக்கு எதிரானது.
- ஏற்கெனவே இதேபோன்ற மசோதா, உத்தரகண்ட் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது. அதை எதிர்த்து பல்வேறு தரப்பினரும் உத்தரகண்ட் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளனர். ஆதலால் அது நீதிமன்ற விசாரணையின் கீழ் உள்ளது. அதே போன்ற மசோதா தற்போது குஜராத்திலும் நிறைவேற்றப்பட்டுள்ளது. பல்வேறு மாநிலங்களில் சட்டப்பேரவைத் தேர்தல்களும், குஜராத்தில் மாநகராட்சி தேர்தலும் நடக்கவுள்ள நிலையில், இந்த மசோதா நிறைவேற்றப்பட்டிருப்பதை அரசியல் உள்நோக்கம்கொண்டதாகக் கருதுகிறோம். இந்த மசோதாவை எதிர்த்து, குஜராத் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்வோம்' என்றனர்.

8. நாட்டில் பள்ளிப் பாடத் திட்டங்கள் மற்றும் கற்றல்-கற்பித்தலுக்கான நடைமுறைகளை வகுத்து வரும் அமைப்பான தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி (என்சிஇஆர்டி) கவுன்சிலுக்கு நிகர்நிலை பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம், தனித்துவமான துறைகளில் சொந்த பட்டங்களை வழங்குவதற்கான அதிகாரம் அதற்குக் கிடைத்துள்ளது.

(i) இது தொடர்பாக மத்திய அரசு சார்பில் வெளியிடப்பட்ட அறிவிக்கையில், 'பல்கலைக்கழக மானியக் குழு (யுஜிசி) பரிந்துரையின் பேரில், என்சிஇஆர்டி மற்றும் அதன் 6 இணை நிறுவனங்களுக்கு

நிகர்நிலைப் பல்கலைக்கழக அந்தஸ்தை மத்திய கல்வி அமைச்சகம் வங்கியுள்ளது' என்று தெரிவிக்கப்பட்டது.

(ii) என்சிஇஆர்டி- க்கு ராஜஸ்தான் மாநிலம் அஜ்மீர், மத்திய பிரதேச மாநிலம் போபால், ஒடிஸாவின் புவனேசுவரம், கர்நாடக மாநிலம் மைசூரு, மேகாலயம் மாநிலத்தின் ஷில்லாங் ஆகிய பகுதிகளில் மண்டல நிறுவனங்கள் உள்ளன. இவற்றுக்கும், போபாலில் உள்ள பண்டிட் சுந்தர்லால் சர்மா மத்திய தொழில்கல்வி நிறுவனத்துக்கும் நிகர்நிலை பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

(iii) 'டி நோவோ' பிரிவின் கீழ் என்சிஇஆர்டி-க்கு நிகர்நிலைப் பல்கலைக்கழக அந்தஸ்து வழங்க 3 ஆண்டுகளுக்கு முன்பு மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. அதன்படி, இந்த அந்தஸ்து தற்போது வழங்கப்பட்டு அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

(iv) இந்த 'டி நோவோ' பிரிவின் கீழ் யுஜிசி-யிடம் நிகர்நிலைப் பல்கலைக்கழக அந்தஸ்தைப் பெறும் நிறுவனங்கள், ஏற்கெனவே நாட்டில் இயங்கி வரும் பல்கலைக்கழகங்கள் சார்பில் வழங்கப்படும் படிப்புகள் சாராமல், வளர்ந்து வரும் தனித்துவமான துறைகளின் கீழ் மட்டும் பட்டப்படிப்புகள் மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளை வழங்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

(v) யுஜிசி அவ்வப்போது வெளியுடும் வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறைகளுக்கு உட்பட்டே என்சிஇஆர்டி புதிய பட்டப் படிப்புகளை வழங்க வேண்டும். வர்த்தக ரீதியில் லாப நோக்குடைய நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என்பன உள்ளிட்ட நிபந்தனைகளும் என்சிஇஆர்டி-க்கு விதிக்கப்பட்டுள்ளது.

(v) தற்போது, உள்ளூர் பல்கலைக்கழகங்களின் இணைப்பு அந்தஸ்தின் கீழ், என்சிஇஆர்டி தனது மண்டல நிறுவனங்களின் மூலம் கல்வியியல் இளநிலை மற்றும் முதுநிலைப்

பட்டப்படிப்புகளை வழங்கி வருகிறது.

(vi) இனி, என்சிஇஆர்டி சொந்தமாகவே இந்த பட்டப் படிப்புகளை வழங்க முடியும் என்பதோடு, ஆராய்ச்சி படிப்புகள், புதிய கண்டுபிடிப்புகளுக்கான பாடத் திட்டங்களையும் என்சிஇஆர்டி வழங்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

9. பிகார் மாநிலத்தில் கள்ளச்சாராயம் குடித்து 4 பேர் உயிரிழந்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது

(i) பிகாரில் 2016-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5-ஆம் தேதி முதல் பூரண மதுவிலக்கு அமலில் உள்ளது. மது விற்பனை, மது அருந்துதல் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளது.

10. கங்கை நதியில் நீர் தரம் குளிப்பதற்கு உகந்த வகையில் உள்ளது; நதியின் மாசுபாடு குறைந்துகொண்டே வருகிறது' என மத்திய அரசு தெரிவித்தது.

(i) இதுதொடர்பாக மக்களவையில் கேட்கப்பட்ட கேள்விக்கு மத்திய ஜல் சக்தி துறை இணையமைச்சர் பூஷண் சௌதரி அளித்த எழுத்துபூர்வ பதிலில், 'கங்கை நதியின் நீர் தரம் குறித்து உத்தரகண்ட், உத்தர பிரதேசம், பிகார், ஜார்க்கண்ட் மற்றும் மேற்குவங்கம் ஆகிய 5 மாநிலங்களில் 112 பகுதிகளில் கடந்த ஆண்டு ஜனவரி முதல் ஆகஸ்ட் வரை ஆய்வு நடத்தப்பட்டது.

(ii) இந்த தரவுகளின் அடிப்படையில் கங்கை நதியின் நீர்மக் கரைசலின் அமிலத்தன்மை மற்றும் ஆக்ஸிஜன் கரைந்த நிலை அனைத்துப் பகுதிகளிலும் குளிப்பதற்கு உகந்த வகையில் இருப்பது கண்டறியப்பட்டது. உத்தர பிரதேசத்தின் சில இடங்களில் மட்டும் கங்கை நீரின் தரம் குறைவாக காணப்படுகிறது.

(iii) கங்கை மற்றும் அதன் துணை ஆறுகளையொட்டிய 50 பகுதிகள் மற்றும் யமுனையை யொட்டிய 26 பகுதிகளில் நீரின் உயிரியல் ஆக்ஸிஜன் தேவை 'நன்று' முதல் 'மிதம்' என்ற நிலையிலேயே இருந்தது. நதியின் மாசுபாடு குறைந்துகொண்டே வருகிறது.

(iv) கங்கையை தூய்மைப்படுத்தும் நமாமி கங்கை திட்டத்தின் கீழ் 2026, பிப்ரவரி வரை ரூ.43,030 கோடியில் 524 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

(v) தேசிய நதிகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ரூ.8,970.51 கோடி மதிப்பில் 17 மாநிலங்களில் 100 நகரங்களில் உள்ள 58 நதிகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன' எனத் தெரிவிக்கப்பட்டது.

11. திரு. மிருத்யுஞ்சய குமார் நாராயண் (ஐஏஎஸ்) அவர்கள், மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் இந்தியாவின் தற்போதைய பதிவாளர் ஜெனரல் மற்றும் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு ஆணையராகப் பணியாற்றி வருகிறார்.

12. இந்தியாவில் கோவில்களில் ஏற்படும் கூட்ட நெரிசல் துயரங்களின் தொடர் நிகழ்வுகள் :-

(i) சமீபத்திய சம்பவம் (மார்ச் 31, 2026)

- பீகார் மாநிலத்தின் நாலந்தா மாவட்டத்தில் அமைந்துள்ள சுட்லா மாதா கோவிலில், செவ்வாய்க்கிழமை வழிபாட்டின் போது கூட்ட நெரிசல் ஏற்பட்டது.
- இதில் ஒன்பது பேர் உயிரிழந்தனர்; மேலும் பலர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.
- வழக்கமான நடைமுறையின்படி, உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டதுடன், நிவாரண நிதியும் அறிவிக்கப்பட்டது. திப் நகர் காவல்

நிலையப் பொறுப்பு அதிகாரி பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்; மேலும் நான்கு கோவில் பூசாரிகள் உட்பட 40 நபர்கள் மீது முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்யப்பட்டது.

- அங்கு கூடியிருந்த பக்தர்களின் எண்ணிக்கை சுமார் 8,000 ஆகும். இது கட்டுப்படுத்த முடியாத அளவிற்குப் பெரிய எண்ணிக்கையாகக் கருதப்படுவதில்லை. எனவே, இந்தத் துயரம் கூட்டத்தின் அளவால் ஏற்பட்டதை விட, பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஏற்பட்ட தோல்வியாலேயே நிகழ்ந்துள்ளது என்பது தெளிவாகிறது.

(ii) வரலாற்று மற்றும் புள்ளிவிவரப் பின்னணி

- நீண்டகால வரலாறு: 1950-ஆம் ஆண்டின் கும்பமேளா முதல் 1990-ஆம் ஆண்டின் சபரிமலை சம்பவம் வரை, அண்மையில் கடந்த ஆண்டு ரத்னகர் (சகலியம்) கோவிலில் ஏற்பட்ட கூட்ட நெரிசல் துயரம் வரை, கோவில்களில் ஏற்படும் கூட்ட நெரிசல் சம்பவங்கள் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளன.
- மூன்று தசாப்த காலத் தரவுகள்: கடந்த 30 ஆண்டுகளில், இந்தியாவில் 4,000-க்கும் மேற்பட்ட பெரிய அளவிலான கூட்ட நெரிசல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.
- இந்தியாவில் கூட்ட நெரிசல் தொடர்பான உயிரிழப்புகளில் 79% கோவில்கள், தேவாலயங்கள் உள்ளிட்ட மத வழிபாட்டுத் தலங்களிலேயே நிகழ்கின்றன என்று புள்ளிவிவரத் தரவுகள் தெரிவிக்கின்றன.
- 2014-ஆம் ஆண்டில் சீனாவில் ஏற்பட்ட கூட்ட நெரிசல் சம்பவத்திற்குப் (இதில் 62 பேர் உயிரிழந்தனர்) பிறகு, அந்நாடு கடுமையான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை அமல்படுத்தியது. அதன் விளைவாக, அங்கு இத்தகைய சம்பவங்கள் நிகழ்வது மிகவும் அரிதாகிவிட்டது. ஆனால், இந்தியா அத்தகைய பாடங்களைக் கற்றுக்கொண்டு செயல்படுவதில் தவறிவிட்டது.

(iii) திட்டமிடல் மற்றும் கட்டிடக்கலையில் உள்ள குறைபாடுகள்

- தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம் (NDMA) கூட்ட நெரிசலைக் கண்டறிதல், முன்னெச்சரிக்கை திட்டமிடல் மற்றும் வெளியேறும் பாதைகளை நிர்வகித்தல் உள்ளிட்ட விரிவான 'கூட்ட மேலாண்மை வழிகாட்டுதல்களை' பல ஆண்டுகளுக்கு முன்பே வெளியிட்டது. ஆனால், உள்ளூர் காவல் நிலையங்கள் இவற்றை நடைமுறையில் செயல்படுத்துகின்றனவா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.
- கட்டிடக்கலை ஞானம் எதிர் நவீன காலத் தோல்வி: பண்டைய இந்தியக் கோவில் கட்டிடக்கலை (வாஸ்து மற்றும் தச்சு சாஸ்திரம்) முறைகள், நீண்ட நடைபாதைகள் மற்றும் மண்டபங்கள் வாயிலாக பக்தர்களை ஒழுங்குமுறையுடன் வழிநடத்தி, கூட்டத்தை நிர்வகிக்கும் வகையிலேயே வடிவமைக்கப்பட்டிருந்தன. ஆனால், நவீன காலத்தில் நிகழும் இத்தகைய துயரங்கள், சமூக ஒழுக்கமும் தனிமனிதப் பொறுமையும் குறைந்து வருவதையே சுட்டிக்காட்டுகின்றன.
- பெரும்பாலான துயரச் சம்பவங்களுக்கு, பக்தர்களின் கட்டுப்பாடற்ற நகர்வுகள், ஒழுங்கற்ற பாதைகள் மற்றும் அதிகாரிகளின் தரப்பில் போதிய கண்காணிப்பு இல்லாதது ஆகிய காரணிகளின் கூட்டு விளைவே காரணமாக அமைகிறது.

(iv) வெற்றிகரமான மாதிரிகளும் தீர்வுகளும்

- பொற்கோயில் மாதிரி: அமிர்தசரஸில் உள்ள பொற்கோயில், தினமும் 1 லட்சம் முதல் 1.5 லட்சம் பக்தர்களைக் கையாளுகிறது; அங்கு இலவச உணவு மற்றும் வசதிகள், கச்சிதமான ஒழுக்கம் மற்றும் கூட்ட நெரிசல் சம்பவங்கள் ஏதுமின்றி வழங்கப்படுகின்றன.

- நிர்வாகப் பொறுப்பு: மேம்பட்ட தொழில்நுட்பக் காலத்தில் நிகழும் இந்தக் கூட்ட நெரிசல் மரணங்கள், நிர்வாகத் திறமையின்மைக்குச் சான்றாகும்.
- சம்பவத்திற்குப் பிந்தைய வழக்கமான இரங்கல் மற்றும் விசாரணைச் சடங்குகளை விட, மனித உயிருக்கு அதிகாரிகள் முன்னுரிமை அளிப்பதற்கு முன்பு, இதுபோன்ற துயரங்கள் இன்னும் எத்தனை முறை நிகழ வேண்டும்?

13. இந்தியாவில் உறுப்பு மற்றும் உடல் தானம் குறித்த பகுப்பாய்வு :-

(i) வரையறைகள் மற்றும் நிறுவனக் கட்டமைப்பு

- உறுப்பு தானம்: ஒரு பெறுநரின் உயிரைக் காப்பாற்றுவதற்காக, உயிருடன் இருக்கும்போதோ அல்லது இறப்பிற்குப் பின்னரோ குறிப்பிட்ட உறுப்புகளை தானம் செய்யும் செயல்.
- உடல் தானம்: இறப்பிற்குப் பிறகு, குறிப்பாக மருத்துவ ஆராய்ச்சி மற்றும் கல்வி நோக்கங்களுக்காக முழு உடலையும் தானம் செய்தல்.
- ஒழுங்குமுறை: இந்தியாவில் உறுப்புகளைப் பெறுதல் மற்றும் விநியோகித்தலை 'தேசிய உறுப்பு மற்றும் திசு மாற்று அமைப்பு' (NOTTO) ஒழுங்குபடுத்துகிறது.
- அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளில் குடும்பத்தினரின் ஒப்புதல் தேவைப்படுகிறது; ஆனால் பல நாடுகளில் "விலகல் முறை" (opt-out systems) நடைமுறையில் உள்ளது—அதாவது, ஒரு நபர் தனது வாழ்நாளில் தானம் செய்ய வெளிப்படையாக மறுக்காத பட்சத்தில், அவர் தானம் செய்ய ஒப்புக்கொண்டதாகவே கருதப்படும்.

(ii) இந்தியாவில் சட்ட மற்றும் வரலாற்று காலவரிசை

- 1994: உறுப்புகளை அகற்றுதல், சேமித்தல் மற்றும் மாற்று அறுவை சிகிச்சை செய்தல் ஆகியவற்றை ஒழுங்குபடுத்தவும், மனித உறுப்புகளின் வணிக ரீதியான விற்பனையைத் தடுக்கவும் இந்திய அரசு 'மனித உறுப்பு மாற்றுச் சட்டத்தை' இயற்றியது.
- 2014–2024 வளர்ச்சி: 2014-ஆம் ஆண்டிலிருந்து, இந்தியாவில் சிறுநீரகம் மற்றும் கல்லீரல் தானங்கள் 2.5 மடங்காக அதிகரித்துள்ளன; அதேவேளையில் இதய தானங்கள் 6.5 மடங்காக உயர்ந்துள்ளன.
- 2017: புள்ளிவிவரங்களின்படி, 176 தானம் அளிப்பவர்களுடன் தமிழ்நாடு முதலிடத்தில் இருந்தது; அதைத் தொடர்ந்து மகாராஷ்டிரா (170) மற்றும் ஆந்திரப் பிரதேசம் (150) ஆகிய மாநிலங்கள் இடம்பிடித்தன.
- 2023: நாடு முழுவதும் மொத்தம் 12,526 சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகளும், 4,173 கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டன.
- 2024: இந்தியா முழுவதும் 15,000-க்கும் மேற்பட்ட தனிநபர்கள் தங்கள் உடலை தானம் செய்தனர்.
- 2025: உடல் மற்றும் உறுப்பு தானத்தில் இந்தியாவின் முன்னணி மாநிலமாக, தொடர்ந்து 8-வது ஆண்டாகத் தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்டது.

(iii) முக்கிய மருத்துவ மற்றும் பொருளாதார உண்மைகள் :-

- உலகளாவிய நிலை: சிறுநீரகம் மற்றும் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதில் இந்தியா தற்போது உலக அளவில் 3-வது இடத்தில் உள்ளது.
- தான இடைவெளி: பல மேற்கத்திய நாடுகளில் தான விகிதம் 70–80% ஆக உள்ள நிலையில், இந்தியாவில் இந்த விகிதம் 10 லட்சம் பேருக்கு 0.05 முதல் 0.08 என்ற மிகக்

குறைந்த அளவிலேயே உள்ளது.

- இறப்பு நெருக்கடி: ஒவ்வொரு ஆண்டும், தேவையான உறுப்பு சரியான நேரத்தில் கிடைக்காத காரணத்தினால் இந்தியாவில் 5 லட்சம் பேர் உயிரிழக்கின்றனர்.
- கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்காகக் காத்திருக்கும்போதே 2 லட்சம் பேர் இறக்கின்றனர்.
- சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்காகக் காத்திருக்கும் 1.50 லட்சம் பேர் உயிரிழக்கின்றனர்.
- இதய மாற்று அறுவை சிகிச்சைக்காகக் காத்திருக்கும் 50,000 பேர் உயிரிழக்கின்றனர்.
- விழிவெண்படலத் தேவை: தற்போது, விழிவெண்படல (கண்) மாற்று அறுவை சிகிச்சைக்காக 1 லட்சம் (100,000) பேர் காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர்.
- ஒரு கொடையாளியின் தாக்கம்: ஒரு உறுப்புக் கொடையாளி 7 உயிர்களைக் காப்பாற்ற முடியும், மேலும் ஒரு திசுக் கொடையாளி (எலும்பு, தோல், இதய வால்வுகள் தானம் செய்பவர்) 50-க்கும் மேற்பட்டோரின் உயிர்களைக் காப்பாற்றவோ அல்லது மேம்படுத்தவோ முடியும்.

(iv) நேரம் மற்றும் நடைமுறைகள்

- உயிருடன் இருக்கும் ஒருவர் ஒரு சிறுநீரகம், கல்லீரலின் ஒரு பகுதி, நுரையீரலின் ஒரு பகுதி, அல்லது கணையம் மற்றும் குடலின் பகுதிகளைத் தானம் செய்யலாம்.

(v) குறைந்த உறுப்பு தான விகிதங்களுக்கான காரணங்கள்

- விழிப்புணர்வு: உறுப்பு தானத்தின் அவசியம் மற்றும் செயல்முறை குறித்து, குறிப்பாக மூளைச்சாவு ஏற்பட்டால், பொதுமக்களிடையே குறிப்பிடத்தக்க புரிதல் இல்லை.
- மூடநம்பிக்கை மற்றும் தாமதம்: மத ரீதியான தவறான கருத்துக்களும், ஒரு மரணத்தைத் தொடர்ந்து வரும் "துக்க காலத்தின்" உளவியல் ரீதியான அழுத்தமும், குடும்பங்கள் உறுப்பு தானத்திற்கு சம்மதிப்பதைத் தடுக்கின்றன.

(vi) அரசின் நடவடிக்கைகள் மற்றும் பரிந்துரைகள்

- மாநில மரியாதை: தமிழ்நாட்டில், உறுப்பு தானம் செய்பவர்களின் தியாகத்தை ஊக்குவிக்கவும் மதிக்கவும், அரசு இப்போது அவர்களின் இறுதிச் சடங்குகளை முழு மாநில மரியாதையுடன் செய்கிறது.
- வெற்றிகரமான மாதிரிகள்: இறந்தவர்களின் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கு ஆந்திரப் பிரதேசத்தின் "ஜீவந்தன்" திட்டம் ஒரு வெற்றிகரமான மாதிரியாகும்.
- தீர்வுகள்: பள்ளிகள், அரசு, சமூக ஊடகங்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், கட்டுக்கதைகளை அகற்றி, தானம் செய்பவர்கள் தங்கள் பங்களிப்பின் மூலம் தொடர்ந்து "வாழ்கிறார்கள்" என்பதை வலியுறுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் தீவிர பங்கு வகிக்க வேண்டும்.